**வனசீவராசிகள் பாதுகாப்பு நிதியம் - 2014**

-----------------------------------------------------------

வனசீவராசிகள் பாதுகாப்பு நிதியத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத்தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2009 இன் 22 ஆம் இலக்க வனசீவராசிகள் மற்றும் இயற்கைத் தாவரங்கள் பாதுகாப்பு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் 55 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்கூறிய நிதிக்கூற்றுக்கள் மீதான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

------------------------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானது என முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

----------------------------------------

அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க கணக்காய்வை மேற்கொள்வதன் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும்.

**1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

----------------------------------------------------

இவ் அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் விளைவாக ஐந்தொகை, வருமானச் செலவினக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றில் அறிக்கையிடப்பட்ட அல்லது அறிக்கையிடப்படாத விடயங்கள் தொடர்பாகவும் மூலாதாரங்கள் தொடர்பாகவும் ஏதேனும் செம்மையாக்கல்கள் அவசியமானவையாக காணப்படுகின்றதா என்பதை நான் நிச்சயிக்க முடியாதுள்ளேன்.

**2. நிதிக்கூற்றுக்கள்**

----------------------

**2.1 மறுப்பு அபிப்பிராயம்**

----------------------------------

இவ் அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றைத் தெரிவிக்கவில்லை.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

-----------------------------------------------------

**2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம்**

-----------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம் சொத்துக்கள் பயன்பாட்டிற்கு பொருத்தமான நிலைக்கு உருவாகிய திகதியிலிருந்து அச்சொத்துக்களுக்காக பெறுமானத் தேய்வு செய்யப்பட வேண்டிய போதிலும்

அதற்கிணங்க நடவடிக்கை எடுக்காமையினால் மீளாய்வாண்டிற்கான பெறுமானத் தேய்வு ரூபா 10,136,160 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 09 இன் பிரகாரம் இருப்புக்களை பெறுமதியிடும் அடிப்படை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டு தொடர்பாக பால்மாவிற்காகச் செலுத்த வேண்டிய ரூபா 4,004,160 தொகையும், மின்சாரத்திற்காகச் செலுத்த வேண்டிய ரூபா 126,658 தொகையும் பத்திரிகை விளம்பரத்திற்காகச் செலுத்த வேண்டிய ரூபா 61,880 தொகையும் அட்டுறுச் செலவினமாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் 7,500 இறப்பர் தோட்டாக்களைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 4,178,965 தொகை இராணுவத்திற்குச் செலுத்தப்பட்டிருந்த போதிலும் இருப்புக்கள் கிடைத்திருக்காததனால் வழிச்சரக்காக நிதிக்கூற்றுக்களில் காட்டப்படாது செலவாகப் பதிவழிக்கப்பட்டிருந்தது.

(இ) நாய ஆற்று சிறிய அளவிலான நீர் மின் பிறப்பாக்கியின் காரணமாக வனசீவராசிகள் சரணாலயத்திற்கு இடம்பெற்ற சேதத்தை மீளமைப்பதற்காக தனியார் கம்பனி ஒன்றிடமிருந்து கிடைத்த ரூபா 3,000,000 பணம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

(அ) பின்வரும் விடயங்களுக்கு எதிரே சுட்டிக்காட்டப்பட்டிருந்த சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|
| | ரூபா | |
| i. யானை வெடி இருப்பு | 761,712 | பௌதீக இருப்பின் மெய்மையாய்வு அறிக்கை |
| ii. விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் | 800,000 | பங்குபற்றுனர்களின் பெயர்ப் பதிவேடும் வளவாளர்களின் விபரமும் |
| iii. செலுத்தவேண்டிய மிகையூதியம் | 33,197,326 | விபரமான பட்டோலையும் காலப்பகுப்பாய்வும் |

(ஆ) நிதியத்திற்கான வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற கொடுக்கல் வாங்கல்களை நிதியத்தின் பேரேட்டில் பதிவுசெய்தல் நாட்குறிப்பு பதிவின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், உரிய நாட்குறிப்பு பதிவேட்டில் நாட்குறிப்புக்கள் மாத்திரம் பதிவுசெய்யப்பட்டிருந்த போதிலும் நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்கள் தயாரிக்கப்பட்டிருக்காததுடன் நாட்குறிப்பு பதிவுகளுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட துணை ஆவணங்கள் எதுவும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக மீளாய்வாண்டின் போது நாட்குறிப்பு பதிவுகள் மூலம் நிதியத்தின் கணக்குகளுக்கு மாற்றம் செய்யப்பட்டிருந்த ரூபா 2,158,036,329 தொகையான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியாதிருந்தது.

**2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்**

(அ) 03 ஆண்டுகளுக்கு மேல் பழைமையான செலுத்தவேண்டிய சேவைக் கட்டண மீதி ரூபா 60,063,971 ஆகும்.

(ஆ) நிலையான சொத்துக்களுக்காகச் செலுத்தப்பட்ட ரூபா 3,191,469 பெறுமதியான பெறுமதி சேர் வரியினை (VAT) அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4 போதிய அதிகாரத்தினால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவன பணிப்பாளரின் அங்கீகாரமின்றி வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் வெளிக்கள உத்தியோகத்தருக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 3,377,500 தொகை ஊக்குவிப்பு படியாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) பொதுத்திறைசேரியின் பாதீட்டுத் திணைக்களத்தினது அங்கீகாரமின்றி ரூபா 7,945,400 பெறுமதியான 15 பவுசர் இழுவைப் பெட்டிகளும் 12 டிபின் இழுவைப் பெட்டிகளும் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

**2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை**

பின்வரும் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 757 (i) | ரூபா.6,265,797 கிரயமுள்ள தளபாடங்களும் உபகரணங்களும் மருதமடு வன இல்லத்திலுள்ள பொருள் இருப்பு பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2006 இன் கொள்வனவு வழிகாட்டிக் கோவை | |
| ஐ. 5.4.4 (i) ஆம் பிரிவு | முற்பணக் கொடுப்பனவிற்கான பிணையின்றி ரூபா 337,650 தொகையான முற்பணங்கள் செலுத்தப்பட்டிருந்தது. |
| ஐ. 8.13.4 ஆம் பிரிவு | லுணுவெவ சுற்றுலா விடுதியினை நிர்மாணிக்கும் போது மேலதிக வேலை மற்றும் கிரய முரண்களின் கூட்டு மொத்தமானது மொத்த கிரய பெறுமதியில் 10 சதவீதத்தை மிகைத்து செலுத்தியமை தொடர்பாக அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

**3. நிதி மீளாய்வு**

**3.1 நிதிவிளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியத்தின் நிதி விளைவுகள் ரூபா 735,934,278 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 530,377,190 ஆக இருந்ததனால்

நிதி விளைவுகளில் ரூபா 205,557,088 அதிகரிப்பு காணப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது மிருகக்காட்சிசாலை நுழைவுக் கட்டண வருமானம் ரூபா.240,316,894 ஆல் அதிகரித்தமை இந்த முன்னேற்றத்திற்கு பிதான காரணமாக இருந்தது.

## 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதியத்தின் முன்னைய ஆண்டிற்கான வருமானமாகிய ரூபா.942.4 மில்லியனுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான வருமானம் ரூபா.1199.6 மில்லியன் வரை ரூபா 257.2 மில்லியனால் அல்லது 27.3 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

(ஆ) நிதியத்தின் முன்னைய ஆண்டிற்கான செலவுகள் ரூபா 412 மில்லியனாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அது ரூபா 463.68 மில்லியன் வரை ரூபா 51.68 மில்லியனால் அல்லது 12.5 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. அந்த அதிகரிப்புத் தொடர்பில் வெளிநாட்டுப் பயிற்சி மற்றும் பெறுமதி சேர் வரி தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட செலவுகள் நூற்றுக்கு நூறு வீதமாகவும் நானாவித செலவுகள் 623 சதவீதத்தினாலும் வனசீவராசிகளைப் பாதுகாப்பதற்கான செலவுகள் 517 சதவீதத்தினாலும் யானைகளை விரட்டுதல் செலவுகள் 113 சதவீதத்தினாலும் அதிகரித்தல் காரணமாக இருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

## 4.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மருதமடு வன இல்லமானது 60 சுற்றுலாப்பயணிகளுக்கு தங்குமிட வசதிகளை வழங்குவதற்காக நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் அச்சுற்றுலா விடுதிக்காக ஒரு சுற்றுலா விடுதிப் பொறுப்பாளரும் சுற்றுலா விடுதி உதவியாளர் ஒருவரும் மாத்திரம் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்தார்கள். போதியளவு உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்படாமையினால் அச்சுற்றுலா விடுதியை உரிய முறைப்படி பராமரிக்க முடியாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) சுற்றுலாப் பயணிகளின் வரவுப்பதிவேட்டின் பிரகாரம் மருதமடு வன இல்லம் 2014 யூலை 11 ஆந் திகதியிலிருந்து உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளுக்காகத் திறந்துவிடப்பட்டிருந்தது. மேலும் இச்சுற்றுலாப்பயணிகளின் வருகை மற்றும் வெளிச்செல்லல் பதிவேட்டில் உத்தரவு பெற்றவர்களின் பெயர் மாத்திரம் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் சுற்றுலாப்பயணிகளின் வருகை தந்த நேரமும் வெளியே சென்ற நேரமும் பதிவுசெய்யப்படாதிருந்தது. இதன் பிரகாரம் சரியாகவும் முறைப்படியாகவும் இப்பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

## 4.2 சச்கைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

மீளாய்வாண்டில் 100,000 கலண்டர்களை அச்சிடுவதற்காக ரூபா 358,000 தொகை நிதியத்தின் நோக்கங்களுக்கு புறம்பாக செலவுசெய்யப்பட்டிருந்தது.

## 4.3 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 12,873,293 கூட்டுமொத்த தொகை செலவுசெய்து நிர்மாணிக்கப்பட்டிருந்த மஹவெவ சுற்றுலா விடுதிக்குச் செல்வதற்கு நிரந்தரப் பாதை ஒன்று தயார்படுத்தாததன் காரணமாக நிர்மாணம் பூர்த்திசெய்யப்பட்டிருந்த போதிலும் 2015

பெப்ரவரி வரை ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட காலம் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை.

(ஆ) ரூபா 11,727,309 கூட்டு மொத்தத் தொகை செலவு செய்து நிர்மாணிக்கப்பட்டிருந்த வீவல சுற்றுலா விடுதி நீர் இல்லாமையின் காரணமாக பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளமுடியாது 2015 யூலை வரை 1 ஆண்டு 09 மாத காலம் மூடப்பட்டிருந்தது.

## 4.4 இனங்காணப்பட்ட நட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வில்பத்து தேசிய சரணாலயத்தின் மருதமடு வன இல்லத்தை நிர்மாணிக்கும் ஒப்பந்தத்திற்காக ஒப்பந்தக்காரருக்கு ரூபா 15,668,338 பணம் மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) தெயட்ட கிருள கண்காட்சி மைதானத்தில் பொருத்துவதற்காக பெரிய அளவிலான LED தொலைக்காட்சி திரை ஒன்றை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளும் போது ஆகக் குறைந்த விலை மனுவைச் சமர்ப்பித்த நிறுவனத்திற்கு வழங்கப்படாமையினால் ரூபா 891,935 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது.

## 4.5 ஒப்பந்த நிர்வாகத்தின் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) லுணுவெவ சுற்றுலா விடுதியினை நிர்மாணிக்கும் போது பொறியியலாளர் மதிப்பீட்டினை மிகைத்து ரூபா 1,201,847 செலவு செய்யப்பட்டிருந்தது. மேலும் மிகிந்தலையிலுள்ள மஹகனந்தராவ சுற்றுலா விடுதிப் பொறுப்பாளரது உத்தியோக பூர்வ இல்லத்தின் நிர்மாணம் தொடர்பான அளவீட்டு பௌதீக பரிசோதனையின் போது ரூபா 748,760 தொகையான மிகைக் கொடுப்பனவு இடம்பெற்றிருந்தது. அப்பணத்தை ஒப்பந்தக்காரரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) லுணுவெவ, மஹகனந்தராவ, மஹவெ வீவல ஆகிய சுற்றுலா விடுதிகளை நிர்மாணித்தலின் தாமதம் தொடர்பாக அறவிடவேண்டியிருந்த ரூபா 4,157,820 தொகையான தாமதக் கட்டணங்களில் ரூபா 66,664 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

(இ) மேலே கூறப்பட்ட நான்கு சுற்றுலா விடுதிகளிலும் விஷேடதரத்திலுள்ள (VIP) அறைகளை நிர்மாணிப்பதற்காக மேலதிக மற்றும் கூடுதல் வேலைகளுக்காக ரூபா.26,777,087 தொகை செலவு செய்யப்பட்டிருந்தது. மேலும் ஆண்டின் இறுதியின் போது சுற்றுலா விடுதியினுள் மழை நீர் (காற்றுடன்) வீசுதல், மழை நீர் வடிந்து செல்வதற்கு வடிகாண் முறைமை நிர்மாணிக்கப்படாமை, மழை நீர் பீலி பயன்படுத்தப்படாமை ஆகிய திட்டமிடல் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(ஈ) மாணிக்கபொல உத்து சுற்றுலா விடுதியை நிர்மாணித்தலானது ரூபா.13,524,826 தொகையான பொறியியலாளர் மதிப்பீட்டிற்கு வழங்கப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் இந்த நிர்மாணம் பூர்த்திசெய்யப்படவேண்டிய திகதி 2013 மே 10 ஆக இருந்த போதிலும் 2015 பெப்ரவரி இறுதி வரை வேலை பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. நிர்மாணிக்கப்பட்டிருந்த நீர் தாங்கிக்கு PVC 100mm குழாய்கள் பொருத்துவதற்கு இணங்கியிருந்த போதிலும் அதற்குப் பதிலாக நியமத்திற்குப் புறம்பாக நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்த PVC குழாய்களைப் பொருத்துவதற்காக ரூபா 106,500 தொகைக்கு விலைப்பட்டியல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இந்நிர்மாணத்தின் உசாத்துணைப் சேவைகளை வழங்குவதற்கு மத்திய பொறியியல் ஆலோசனைப் பணியகம் ரூபா 786,000

தொகைக்கு இணங்கியிருந்ததுடன் ரூபா 652,256 தொகை 2015 ஏப்ரல் வரை செலுத்தப்பட்டிருந்தது.

சுற்றுலா விடுதிக்கான உள்வரும் வேலியை கினிசப்பு பலகையினால் தயாரித்தல் மற்றும் பொலிஸ் பண்ணுவதற்காக ரூபா 383,670 தொகையானது மத்திய பொறியியல் பணியகத்தின் சான்றுபடுத்தலின் அடிப்படையில் செலுத்தப்பட்டிருந்தது. எனினும் இவ்வேலி உரிய நியமத்திற்கு இணங்க இல்லாமையின் காரணமாக சுற்றுலா விடுதியினை திறப்பதற்கு முன்னர் உக்கிப் போகத் தொடங்கியிருந்தது. எவ்வாறாயினும் இச்சேவையின் திட்டமிடல் குறைபாடு மற்றும் உரிய கவனம் செலுத்தாமையின் காரணமாக நிர்மாணத்தில் தாமதம் ஏற்பட்டதாக பௌதீகப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

(உ) வில்பத்து தேசிய சரணாலயத்தின் மருதமடு வன இல்லத்தை நிர்மாணித்தலானது ஒப்பந்தக்காரருடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் 2013 யூன் 12 ஆந் திகதி பூர்த்திசெய்யப்பட வேண்டியிருந்த போதிலும் உடன்படிக்கையின் பிரகாரம் பூர்த்திசெய்யப்படாதிருந்ததுடன் அதற்கு இணங்க தாமதக்கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. ஆலோசனை நிறுவனத்தின் முறையான திட்டமிடல் இல்லாமை, கணக்காய்விற்கு தகவல்கள் வழங்கப்படாமை, பௌதீக செயல் முன்னேற்றத்தை அறிவிக்காமை, இறுதி விலைப்பட்டியலைச் சமர்ப்பிக்காது மேலதிக வேலைகளுக்கான 02 விலைப்பட்டியல்கள் மூலம் கொடுப்பனவுகளைச் செய்வதற்கு சிபார்சு செய்தல், தெரிவுசெய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களின் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்கள் மற்றும் துணை ஆவணங்களிலுள்ள குறைபாடுகள் முதலிய பலவீனங்கள் இந்த ஒப்பந்தம் தொடர்பாக அவதானிக்கப்பட்டன. சுட்டிக்காட்டப்பட்ட இப்பலவீனங்களை சரிசெய்வதற்கோ அல்லது இது தொடர்பாக கருத்துரைகளை வழங்குவதற்கோ முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

மீளாய்வாண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 கொள்வனவுத் திட்டம்

மீளாய்வாண்டின் போது கொள்வனவுத் திட்டத்தில் உள்ளடக்கப்படாத ரூபா.22,335,666 தொகையான கட்டிட நிர்மாணங்களும் ரூபா 4,178,966 தொகையான இறப்பர் தோட்டாக்களைக் கொள்வனவு செய்தல்களும் இடம்பெற்றிருந்தது.

### 5.3 கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள்

தேசிய சரணாலயங்களில் சுற்றுலாப் பயணிகளுக்கு கணனிமயப்படுத்தப்பட்ட நுழைவுச் சீட்டுக்களை வழங்க முடியாத சந்தர்ப்பங்களில் படிவம் 172 இணை பயன்படுத்துவதன் மூலம் இடம்பெறக் கூடிய ஒழுங்கீனங்களைத் தடுப்பதற்காக நுழைவுப் பத்திரங்களை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாகத் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்த போதிலும் இரண்டு வருட காலங்கள் எடுத்திருந்தும் இதுவரை தீர்மானிக்கப்பட்டவாறு நுழைவுப்பத்திரம் வழங்குதல் இடம்பெற்றிருக்கவில்லை.

### 5.4 தீர்த்துவைக்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

முன்னைய ஆண்டின் போது கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்ட பின்வரும் கணக்காய்வுப் பந்திகள் தொடர்பாக நிதியம் / திணைக்களத்தினால் எதுவித முயற்சியும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(அ) 2008 ஆம் ஆண்டிலிருந்து துவக்குகள், தோட்டாக்கள் மற்றும் யானைப்பட்டாசுகள் தொடர்பாக பதிவேட்டுப் பொருள் மெய்மையாய்வுகள் மேற்கொள்ளப்படாமையும்

முன்னர் இருந்த உத்தியோகத்தர்கள் தமது பொறுப்பில் காணப்பட்ட சொத்துக்களை எழுத்து மூலம் ஒப்படைத்தலும் இடம்பெற்றிருக்கவில்லை.

(ஆ) உடவளவையிலுள்ள எத் அதுறு செவனயில் ரூபா 58,000 பெறுமதியான 16 டிக்கட் புத்தகங்கள் காணாமல் போனமை.

(இ) பொது 172 பற்றுச்சீட்டுக்களைப் பயன்படுத்தி வன சரணாலயங்களில் வருமானத்தைச் சேகரிக்கும் போது மோசடிகள் இடம்பெறலாம் என்பது அவதானிக்கப்பட்டதுடன் இப்பாதகமான நிலையை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென கணக்காய்வுக் குழுக் கூட்டத்தின் போது இணக்கம் காணப்பட்டு இரண்டு ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் அதனைச் சரிசெய்வதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்காமை.

(ஈ) அங்கம்மெடில்ல தேசிய சரணாலயத்தில் யானைகளை நிறுத்தி வைத்தல், யானைகளை மேலே ஏற்றுவதற்காக மேடைகளை நிர்மாணித்தல் என்பவற்றிற்காக ரூபா 4,574,919 செலவு செய்யப்பட்டிருந்த போதிலும் கட்டிடம் பயன்படுத்தப்படாது காணப்பட்டமை.

(உ) மன்னாரில் பதவியணியினருக்கான உத்தியோகபூர்வ வாசஸ்தலம், வன பாதுகாப்பு அலுவலகம், வேலையாட்கள் உத்தியோகபூர்வ இல்லம் என்பவற்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 8,630,360 பெறுமதிக்கு 2011 ஆம் ஆண்டின் போது உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு 2011 ஆம் ஆண்டு இறுதிக்கு முன்னர் வேலைகளைப் பூர்த்திசெய்யும் உடன்பாட்டின் அடிப்படையில் வேலைகளைத் தொடங்குவதற்கான முற்பணமாக ரூபா 1,933,200 தொகை ஒப்பந்தக்காரருக்குச் செலுத்தப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதிவரை செயற்திட்ட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.5 சுற்றாடல் மற்றும் சமூகப் பொறுப்புக்களை நிறைவேற்றுதல்

2009 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க உயிரினங்கள் மற்றும் இயற்கைத் தாவரங்கள் பாதுகாப்பு (திருத்திய) கட்டளைச் சட்டத்தை தயாரிப்பதற்கான பிரதான நோக்கம் இலங்கையிலுள்ள வன சீவராசிகளையும் இயற்கைத் தாவரங்களையும் அவற்றின் வாழ் நிலங்களையும் வணிக ரீதியாகவும் ஏனைய முறைமையிலும் பொருத்தமற்ற முறையில் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்வதனைத் தவிர்த்துக் கொள்வதற்காகவும் இலங்கையில் இனவிருத்தியினைப் பாதுகாப்பதற்காகவும் ஏற்பாடுகள் உருவாக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக மொரகஹகந்த மற்றும் களுகங்கை செயற்திட்டத்தின் கீழ் 14,485 மரங்களை அகற்றுவதற்கும் அதற்காக பணம் அறவிடுவதற்கும் அனுமதி அளிக்கப்பட்டிருப்பதுடன் அதிக இயற்கை பாதுகாப்பு பிரதேசமான நாயகங்க செயற்திட்டத்தின் கீழ் மின்பிறப்பாக்கி நிலையம் ஒன்றினை நிர்மாணிப்பதற்காகவும் அங்கீகாரம் வழங்கப்பட்டு ரூபா 3 மில்லியன் தொகை தனியார் கம்பனி ஒன்றிடமிருந்து அறவிடப்பட்டிருந்தது.

## 5.6 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டில் நிதியத்தின் பாதீட்டு எல்லையை மிகைத்து 07 செலவினை விடயங்களுக்காக ரூபா 43,765,791 தொகை செலவு செய்யப்பட்டிருந்தது. மேலும் நிதியத்தின் பாதீடு 2015 சனவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

--------------------------------------------

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது பணிப்பாளர் நாயகத்திற்கு தெரிவிக்கப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) மிருகக்காட்சிசாலைகளின் வருமானங்களைச் சேகரித்தல்
(ஆ) தண்டப் பணங்களை சேகரித்தலும் மிகையூதியம் செலுத்துதலும்
(இ) ஆளணி முகாமைத்துவம்
(ஈ) ஆவணங்களைப் பேணுதல்
(உ) ஒப்பந்த நிர்வாகம்
(ஊ) இருப்புக் கட்டுப்பாடு